


## தி.மு.க. தலைவரான பிறகு நான் தோற்றதே இல்லை! அ.தி.மு.க.வுக்கு பொதுச் செயலாளரான பிறகு பழனிசாமி பத்து தேர்தலிலும் வென்றதில்லை!

# தரங்கெட்டுப் பேசும் பழனிசாமிக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்!

## விழுப்புரம் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் முழக்கம்!

**விழுப்புரம், ஏப். 10-**

**கொடுஞ்சிறைக்கு அஞ்சாதவனா கொரோனாவுக்கு அஞ்சப்போகிறேன்? தரம்கெட்டுப் பேசும் பழனிசாமிக்கு மக்களே தக்க பதிலடி கொடுப்பார்கள்! தி.மு.க.வின் தலைவரான பிறகு நான் தோற்கவே இல்லை; அ.தி.மு.க. பொதுச்செயலாளரான பின்னர் பழனிசாமி வென்றதே இல்லை; பதினோராவது தோல்வியும் காத்திருக்கிறது என விழுப்புரம் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (08-04-2026) விழுப்புரத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:**

கடையேழு வள்ளல்களில் ஒருவரான காரி ஆண்ட மலையமான் நாடும் - வீரத்தின் விளைநிலமாம் ராஜா தேசிங்கு கோட்டை கட்டி ஆண்ட பகுதியும் உள்ள விழுப்புரத்திற்கு நான் வந்திருக்கிறேன்.

விழுப்புரத்தின் பெருமைகளைச் சொல்ல வேண்டும் என்றால்,

கல்வெட்டுகளுக்கு தொண்டூர்!

குடவரைக் கோயில்களுக்கு மண்டகப் பட்டு!

பழமையான கோயில்களுக்கு பனை மலை!

பாறை ஓவியங்களுக்கு கீழ்வாலை!

வரலாற்றுப் பெருமைக்கு திருவக்கரை!

இலக்கியத்திற்கு தண்டபாணி சுவாமிகள்!

நல்லாட்சியின் இலக்கணத்திற்கு ஓமந்தூரார்!

திராவிட அரசியலுக்கு ஏ.ஜி. எனப்படும் அய்யா ஏ. கோவிந்தசாமி அவர்கள்!

இப்படி இன்னும் நிறைய சொல்லிக் கொண்டே போகலாம்!

இப்படிப்பட்ட வரலாற்றுப் பெருமைமிக்க இந்த விழுப்புரம் மாவட்டத்தில் நின்று, தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் காக்க - தனித்தன்மையைப் பாதுகாக்க, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, உங்களின் ஆதரவைக் கேட்டு - வாக்குகளைக் கேட்டு, வந்திருக்கிறேன்.

### தி.மு.க. கூட்டணி வெற்றி வேட்பாளர்கள் தொகுதிகள்!

முதலில், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் லட்சுமணன் அவர்கள். விழுப்புரம் தொகுதியில் ஏற்கனவே மக்கள் பணியாற்றி வரும் இவருக்கு, மீண்டும் தொகுதி மக்கள் உதயசூரியன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி அவர்கள். "ஆழ்கடலில் கண்டெடுத்த நன்முத்து பொன்முடி", "அறிவுமுடிதான் பொன்முடி" - இவ்வாறு



தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் முனைவர் பொன்முடியின் அருமை மகன். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளராகவும் கழகப் பணியாற்றி வருகிறார். கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து, மக்கள் பணியாற்றியவர். அப்பாவுக்கு தப்பாத பிள்ளையாக இந்தப் பகுதி மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் கௌத சிகாமணி அவர்களுக்கு, திருக்கோயிலூர் தொகுதி மக்கள் உதயசூரியன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, செஞ்சி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் செஞ்சி மஸ்தான் அவர்கள். திராவிட மாடல் ஆட்சியில் சிறுபான்மை மற்றும் வெளிநாடுவாழ் நலத்துறை அமைச்சராக இருந்தவர். விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளராக சிறப்பாக கழகப் பணியாற்றி வருபவர். என்னுடைய பேரன்புக்குரிய அன்பு உடன்பிறப்பு பெயரே செஞ்சி மஸ்தான்தான். மூன்றாவது முறையாக செஞ்சி மக்கள் உங்கள் செஞ்சி மஸ்தானை, உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் எல்லாம் வாக்களித்து வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்கள். விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் வெற்றி பெற்று, இந்த இருபது மாத காலத்தில் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் இந்தத் தொகுதிக்கு கொண்டு வந்து சாதித்துக் காட்டிய ஆற்றலாளர் அன்னியூர் சிவா. மாநில விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளராக இருந்து, அந்தப் பகுதி மக்கள் அனைவரின் செல்வாக்கையும் பெற்றிருக்கிறார். அன்னியூர் சிவா அவர்களுக்கு விக்கிரவாண்டி தொகுதி மக்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மயிலம் சட்டமன்றத் தொகுதி. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சேர்ந்த நமது வெல்லும் வேட்பாளர் எல். வெங்கடேசன் அவர்கள். எனது ஆருயிர் நண்பர் நினைவில் வாழும் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் வழிகாட்டுதலில் வளர்ந்தவர். 2011 சட்டமன்றத் தேர்தலில் திருக்கோயிலூர் தொகுதியில் வெற்றி பெற்று மக்கள் பணி செய்தவர். அருமைச் சகோதரி பிரேமலதா விஜயகாந்த் அவர்களால் மயிலம் தொகுதி வேட்பாளராக அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் எல். வெங்கடேசன் அவர்களுக்கு, மயிலம் தொகுதி மக்கள் 'முரசு' சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வானூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கௌதம் திராவிட மணி அவர்கள். தன்னுடைய தாத்தா சுப்பராயன், அப்பா திராவிட மணி ஆகியோரின் வழித்தடத்தில் கழகப் பணியாற்றி வருகிறார், கௌதம் திராவிட மணி அவர்கள். மூன்றாவது தலைமுறையாக கழகப் பணியாற்றும் இவர், மாவட்டக் கவுன்சிலராகவும் மக்கள் பணியாற்றி வருகிறார். இளம் வேட்பாளர் கௌதம் திராவிட மணி அவர்களுக்கு, வானூர் தொகுதி மக்கள் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

நிறைவாக, திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி. நமது தோழமைக் கட்சியான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த வெல்லும் வேட்பாளர் வன்னி அரசு அவர்கள். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சித் தலைவர் தொல். திருமாவளவன் அவர்கள் மற்றும் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் ரவிக்குமார் அவர்களின் நம்பிக்கையைப் பெற்ற வேட்பாளர். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில துணை பொதுச் செயலாளர். பல்வேறு மக்கள் போராட்டங்களை முன்னின்று நடத்தி சிறை சென்றவர். இன்னும் பெருமையோடு சொல்ல வேண்டும் என்றால், தொலைக்காட்சி விவாதங்களில் தீர்க்கமான விவாதங்களைச் செய்பவர். நம்மில் ஒருவராக இருக்கும் வன்னி அரசு அவர்கள் வெற்றிக்கு, கழக நிர்வாகிகள் கடுமையாக உழைக்க வேண்டும். திண்டிவனம் தொகுதி மக்கள் வன்னி அரசு அவர்களுக்கு 'பானை' சின்னத்தில் நீங்கள் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும் என்று அன்போடும் உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன்.

### அறிமுகப்படுத்திய வேட்பாளர்களை அமோக வெற்றி பெறச் செய்வீர்!

இப்போது நான் அறிமுகப்படுத்திய, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் இந்த ஏழு வேட்பாளர்களையும் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும். அதற்கு நீங்கள் எல்லாம் தயாரா? தயார் (மக்கள்). வெற்றி உறுதியா? உறுதி (மக்கள்). வெற்றி உறுதியாகிவிட்டது. வேட்பாளர்கள் இப்போது உட்காரலாம். சீட் கிடைத்து விட்டது!

பல முறை நான் இந்த விழுப்புரத்திற்கு வந்திருந்தாலும், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் வந்ததை என்னால் மறக்கவே முடியாது! என்னால் மட்டுமல்ல. உங்களாலும் மறக்க முடியாத அளவுக்கு, வரலாற்றில் முத்திரை பதித்த நாள், அந்த நாள்! நம்முடைய நெஞ்சங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் திராவிட இயக்கத் தீரர், ஏ.ஜி. என்று அன்போடு அழைக்கப்படும் அய்யா ஏ. கோவிந்தசாமி அவர்களின் நினைவரங்கத்தையும்; அதுமட்டுமல்ல, இடஒதுக்கீட்டிற்கான போராட்டத்தில் உயிரிழந்த 21 சமூகநீதிப் போராளிகளுக்கான மணிமண்டபத்தையும் நான் திறந்து வைத்தேன். இதை வாழ்நாளில் எனக்கு கிடைத்த பெருமையாக நான் கருதுகிறேன்.

2019-ஆம் ஆண்டு விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலுக்கு நான் இங்கு வந்தபோது, நம்முடைய முன்னாள் அமைச்சர் முனைவர் பொன்முடி அவர்களும் - நம்முடைய திராவிட ஆழ்வார் ஜெகத்ரட்சகன் அவர்களும், நம்முடைய சகோதரர் அன்னியூர் சிவா அவர்களும், இதை கோரிக்கையாக வைத்தார்கள். உடனே, தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், சமூகநீதிப் போராளிகளுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அன்றைக்கு நான் உறுதியளித்தேன். இந்த ஸ்டாலின் சொன்னால்... இந்த ஸ்டாலின் சொன்னால்... சொன்னதைச் செய்வான்! 21 சமூகநீதிப் போராளிகளுக்கான மணிமண்டபத்தைக் கட்டி, திறந்து வைத்துவிட்டுதான், இன்றைக்கு உங்களிடம் உரிமையோடு வாக்கு கேட்க வந்திருக்கிறேன்.

> ### இதுதான் – N.D.A. கூட்டணி...
>
> **துரோகங்களால், தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கெடுக்க நினைக்கும் N.D.A... N.D.A. என்றால், உங்களுக்கு புரிவதுபோன்று ஈசியாக சொல்கிறேன். No Development Alliance – தான்... N – No; D–Development. A – Alliance. அதுதான் தற்போது N.D.A. இவ்வளவு துரோகங்களையும் செய்துவிட்டு, கூச்சமே இல்லாமல், மக்களிடம் வாக்கு கேட்டு வருகிறார்கள்.**

### இந்தியா முழுதும் சமூகநீதியை நிலைநாட்ட போராடிய தி.மு.க.!

தமிழ்நாட்டில் மட்டுமல்ல... இந்தியா முழுவதும், சமூகநீதி என்றால், தி.மு.க.! தி.மு.க. என்றால், சமூகநீதி! சமூகநீதிக்காக இந்த மண்ணில் நடந்த மிக முக்கியமான - 1987 போராட்டம்! மறக்க முடியுமா? பெருமதிப்பிற்குரிய அய்யா ராமதாசு அவர்கள் தலைமையில் நடந்த போராட்டம். போராடிய பிற்படுத்தப்பட்ட மக்களை, அன்றைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் காக்கை, குருவிகளை போல், சுட்டுக் கொன்றார்கள். ஆனால், 1989-இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடனே, தலைவர் கலைஞர் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடனே, நம்முடைய ஆருயிர்

தொடர்ச்சி 12–ஆம் பக்கம்